சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 10.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **102/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | தனபால் |
| தந்தை பெயர் | : | தங்கவேல் |
| கிராமம் | : | பெரிய சிங்களாந்தி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | கொத்தனார் |
| வயது | : | 60 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

4, 5 மற்றும் 7ம் எதிரிகள் ஆஜர். 1, 2, எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணை சாட்சியத்தில், நான் காவல் நிலையத்தில் புகார் எழுதிக்கொண்டிருக்கும்போது 7ம் எதிரி ஆர்.எம். சுப்பிரமணியன் காவல் நிலையத்திற்குள் வந்தார் என்றும், நீ என்ன தலித் இனத்தவர்களை வைத்துக்கொண்டால், உன்னை பாதுகாத்திடுவார்களா என பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அங்கிருந்து வெளியே சென்ற 7ம் எதிரி ஆர்.எம்.சுப்பிரமணியன், தலித் இனத்தவர்களையும், தனபால் ஆதாரவாளர்களையும் வெட்டுங்கடா என பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த தகராறில் அ.சா.4 ரவிக்கு கையில் காயமும், அ.சா.7 லெட்சுமணனுக்கு கண்ணில் காயம் ஏற்பட்டது என பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வண்டியிலிருந்து 4, 5 அரிவாள்கள், சில்வர் கலர் துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.02.10 18:26:53 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.